**செய்தி வெளியீடு எண் : 2243** **நாள் : 10.12.2022**

## செய்தி வெளியீடு

மாநில மனித உரிமைகள் ஆணையம் தமிழ்நாட்டின் தலைவர் நீதிஅரசர் மாண்புமிகு,திருS.பாஸ்கரன் அவர்களின் முயற்சியால் சர்வதேச மனித உரிமைகள் தின கொண்டாட்டம், தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையத்தின் அரங்கத்தில் இன்று (10.12.2022) காலை 10.30 மணி முதல் மாநில மனித உரிமைகள் ஆணையம் தமிழ்நாடு மற்றும் சர்வதேச நீதி குழமத்தால் இணைந்து கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் நீதிஅரசர் மாண்புமிகு,திரு.T.ராஜா, செயல் தலைமை நீதிபதி, சென்னை உயர்நீதிமன்றம் முதன்மை விருந்தினராகவும் , மாண்புமிகு திரு.S.ரகுபதி, தமிழக அரசின் சட்டம், நீதிமன்றங்கள், சிறை மற்றும் ஊழல் தடுப்புத்துறை அமைச்சர் கௌரவ விருந்தினராகவும் , அம்மையார் ஜூடித் ரவின், U.S. Consul General, Chennai மற்றும் H.E.திரு.ஹெரிக் சாலேம், The Sixth UN Environment Executive Director and Former Under-Secretary-General of the United Nations சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டார்கள். இந்த விழாவில் திரு.T.குரளமுதன், மாநில திட்ட இயக்குநர், சர்வதேச நீதி குழமம், தமிழ்நாடு மற்றும் திரு.D.சரவணன் வழக்கறிஞர் மற்றும் இணைத் தலைவர், தமிழ்நாடு புதுச்சேரி பார்கவுன்சில், தலைவர் மத்திய சட்டக் கல்லூரி, சேலம் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். இந்த விழா மாநில மனித உரிமைகள் ஆணையம் தமிழ்நாட்டின் தலைவர் நீதிஅரசர் மாண்புமிகு,திருS.பாஸ்கரன் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. இந்த விழாவிற்கு டாக்டர்.K.விஜயகார்த்திகேயன், செயலாளர், மாநில மனித உரிமைகள் ஆணையம் தமிழ்நாடு வரவேற்புரையும் , திரு.N.முரளிதரன், பதிவாளர், மாநில மனித உரிமைகள் ஆணையம் தமிழ்நாடு நன்றியுரையும் வழங்கினார்கள்.

இந்த விழாவின் தொடர்ச்சியாக காலை 11.45 மணி முதல் மதியம் 01.00 மணி வரை ஐக்கிய நாடுகள் சபையின் SDG 8.7 பற்றிய குழு விவாதம் நடைபெற்றது, இந்த குழு விவாதத்திற்கு Dr.P.M.நாயர், I.P.S. (Retired), former Director General, National Disaster Response Force, Director General, Civil Defense,

G.O.I., Nodal Officer, Anti-Human Trafficking, National Human Rights Commission நடுவராக இருந்தார், இந்த குழு விவாதத்தில் திரு.டேவிட் சந்தர் சிங் Co-Author of Commentary on The Bonded Labour System (Abolition) Act, 1976 மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையம் தமிழ்நாடு வழக்கறிஞர், திருமதி. T.ஜெயஸ்ரீ, துணை செயலாளர், தமிழ்நாடு மாநில சட்டசேவை ஆணையம், சென்னை, திரு.N.V.பாலசந்தர் இணை தலைவர், CII–SR, Sub Committee on CSR and affirmative Action மற்றும் திருமதி. R.மணிமேகலை, Joint Director of Prosecution, Tamil Nadu ஆகியோர்கள் கலந்துகொண்டார்கள்.

பதிவாளர்
மாநில மனித உரிமைகள் ஆணையம்
தமிழ்நாடு

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in